1978 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) இல்லை.

(ஆ) இங்கு ஒரு மேம்பாடு திட்டத்திற்காக 30 ஆயிரம் ரூபாய் செலவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியில் உடைப்பு எடுத்ததின் காரணமாக அங்குள்ள முதலைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன என்பது உண்மையா? அதன் காரணமாக கிளிக்கூண்டின் கீழ் உள்ள ஊர்களில் கொள்ளிடத்தில் முதலைகளின் தொல்லைகள் இருக்கின்றன என்று அங்குள்ள மக்கள் அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இதற்கான குறிப்பு இங்கேயில்லை. ஆனால் கிளிக்கூண்டு பகுதியில் இருக்கின்ற பெரிய முதலைகள் 21, சிறிய முதலைகள் 60 இருப்பதாகத் தெரிகிறது.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விடையிலிருந்து அந்தப் பகுதியில் முதலைகள் மிகுதியாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அங்கு முதலைகள் சரணாலயம் ஒன்று அமைத்து முதலைகளைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சரணாலயம் துவக்க இயலாத நிலையில் அது சிறிய இடமாக இருப்பதால், அங்கு தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அங்கு முதலைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ரப்பர், கிராம்பு பயிரிடல்

*வினா எண் 183—திரு வி.கே. கோதண்டராமன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழ் நாட்டில் ரப்பர், கிராம்பு பயிரிடுவதை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழக வனத் துறையினரால் 1978-79-ல் மேலும் 200 ஹெக்டேரும், 1979-80-ல் 300 ஹெக்டேரும் ரப்பர் பயிரிட உத்தேசிக்கப்

பட்டுள்ளது. மத்திய அரசு உதவி பெற்ற மேற்குத் தொடர்ச்சி மலை முன்னேற்ற திட்டத்தின்கீழ் 1978-79-ல் 35 ஹெக்டேர் பரப்பில் கிராம்புத் தோட்டத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராம்பு பயிரிடுவதால் வெளிநாட்டுச் செலாவணி சம்பாதித்துக் கொடுக்கின்றது. கொடைக்கானல் மலையிலே முடிக்கொத்து நோயால் வாழை அழிந்துவிட்டது. அதற்கு மாற்றாக, இந்த கிராம்பைப் பயிரிட்டு, விவசாயிகளுக்கு உதவக்கூடிய நிலையிலே அரசாங்கம் செய்ய முன்வருமா என்று அறிய விருமபுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஐந்தாண்டுக் காலத்தில் 100 ஹெக்டேர் பரப்பளவில் கிராம்பு பயிரிடும் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையும் கருத்தில் கொண்டு, அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போல் கொக்கோ பயிரிடுவதற்கு உதவி செய்ய எந்தெந்த வகையில் அரசு முன்வரும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தனியாகக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த ரப்பர், கிராம்பு பயிரிடுவதற்குத் தேவையான மண் வளம், மழை வளம் எங்கெங்கே இருக்கின்றது என்பதை அறிவிக்க இயலுமா? தமிழகத்திலே வேறு எங்கேனும் அப்படிப் பட்ட திட்டத்தை விரிவாக்குவதற்கான முயற்சி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் முன்னாலேயே விடை அளித்தேன். 100 ஹெக்டேர் நிலத்தில் பயிரிடுவதற்கான திட்டம் இப்போது நிறை வேற்றப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.